பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

06 12 2024 **FRIDAY** **7.15 PM**

தலைப்புச் செய்திகள்

1. நாட்டு மக்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு கல்வி ஒன்றே சிறந்த வழி என்று குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

2. நாட்டின் முன்னேற்றத்தில் வடகிழக்கு மாநிலங்கள் முக்கிய பங்கு வகிக்கும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

3. ஃபெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட தமிழகத்திற்கு தொள்ளாயிரத்து 44 கோடியே 80 லட்சம் ரூபாயை மத்திய அரசு விடுவித்துள்ளது.

4. உத்தரப்பிரதேச மாநிலத்தில் இன்று நேரிட்ட சாலை விபத்தில் எட்டு பேர் உயிரிழந்தனர்.

5. குவஹாத்தி மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Dhruv Kapila – Tanisha Crasto** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

<<<<<<>>>>

நாட்டு மக்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு கல்வி ஒன்றே சிறந்த வழி என்று குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார். ஒடிஷா மாநிலம் மயூர்பஞ்ச் மாவட்டம் **Uparbeda**-வில் தாம் படித்த அரசு பள்ளியில், மாணவர்கள் இடையே உரையாற்றிய அவர், வேலை பெறுவதற்காக மட்டுமே கல்வியை கருதாமல், மாணவர்கள் தங்களின் அறிவுத்திறனை வளர்த்துக்கொள்வதற்கான தளமாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று கூறினார். இதனைத்தொடர்ந்து, பல்வேறு ரயில்வேத்திட்டங்களையும் குடியரசுத் தலைவர் தொடங்கிவைத்தார்.

<<<<<<>>>>

21-ஆம் நூற்றாண்டு இந்தியாவுக்கானது என்றும், நாட்டின் முன்னேற்றத்தில் வடகிழக்கு மற்றும் கிழக்கு மாநிலங்கள் முக்கிய பங்கு வகிக்கும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். புதுதில்லியில் இன்று வடகிழக்கு மாநிலங்களின் கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் திருவிழாவை தொடங்கிவைத்து பேசிய அவர், மேற்கத்திய நாடுகளை மையமாக கொண்ட வளர்ச்சியில், 21-ஆம் நூற்றாண்டு என்பது கிழக்கத்திய நாடுகள், ஆசியா மற்றும் இந்தியாவின் பங்களிப்பு முக்கியமானதாக இருக்கும் என்று கூறினார். கடந்த ஆண்டு இதே பாரத் மண்டபத்தில் இந்தியா தலைமையிலான ஜி-20 நாடுகளின் உச்சிமாநாடு நடைபெற்றதையும் பிரதமர் சுட்டிக்காட்டினார். வடகிழக்கு மாநிலங்களின் கலாச்சார பெருமை இன்று தில்லியில் பன்முக கலாச்சாரத்தை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது என்றும் பிரதமர் பெருமிதம் தெரிவித்தார். இங்குள்ள பல அரங்குகள் மகளிர் தலைமையில் அமைக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சி அளிப்பதாகவும், திரு நரேந்திர மோடி குறிப்பிட்டார்.

<<<<<<>>>>

சீக்கிய மதகுரு தேஜ் பகதூர் ஜி-யின் போதனைகள் தன்னலமின்றி சேவைசெய்வதற்கு ஊக்கம் அளிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், தேஜ் பகதூர் தியாகத்திருநாளில் அவருடைய நீதி, சமத்துவம், மனிதகுல பாதுகாப்புக்கான இணையற்ற தைரியத்தையும், தியாகத்தையும் நினைவு கூர்வதாக குறிப்பிட்டுள்ளார்.

ஒற்றுமை மற்றும் சகோதரத்துவம் குறித்த தேஜ் பகதூரின் போதனைகள் இடர்பாடுகளை எதிர்கொள்வதற்கு ஊக்கம் அளிப்பதாக உள்ளது என்று திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>

நாடாளுமன்றத்தில் ஆளும் பிஜேபி மற்றும் காங்கிரஸ் தலைமையிலான எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இன்று பல்வேறு பிரச்சினைகளை எழுப்பியதால் ஏற்பட்ட அமளி காரணமாக, இரு அவைகளும் நாள் முழுமைக்கும் ஒத்திவைக்கப்பட்டன. மாநிலங்களவையில் ரூபாய் கட்டுகள் கைப்பற்றப்பட்ட பிரச்சினையை எழுப்பி பிஜேபி உறுப்பினர்கள் பிற்பகலில் அமளியில் ஈடுபட்டனர். மாநிலங்களவை துணைத்தலைவர் திரு ஹரிவன்ஷ், பலமுறை வேண்டுகோள் விடுத்தும் பலன் இல்லாததால் அவை நாள் முழுமைக்கும் ஒத்திவைக்கப்பட்டது.

மக்களவையில் எதிர்க்கட்சித்தலைவர் திரு ராகுல்காந்தி குறித்து, பிஜேபி உறுப்பினர் திரு நிஷிகாந்த் துபே தெரிவித்த கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து, காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டதால், அவை நாள் முழுமைக்கும் ஒத்திவைக்கப்பட்டது.

<<<<<<>>>>

ஒளிபரப்புத்துறையில் மாறிவரும் தொழில்நுட்பங்களுக்கு ஏற்ப ஆகாஷவாணி மற்றும் தூர்தர்ஷனில் டிஜிட்டல் மயமாக்கல் உள்ளிட்ட நவீன தொழில்நுட்பங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன் தெரிவித்துள்ளார். மாநிலங்களவையில் இதனை தெரிவித்த அவர், அவ்வப்போது ஒளிபரப்புத்துறையில் கொள்கை முடிவுகள் எடுக்கப்பட்டு, நவீன மயமாக்கப்பட்டு வருவதாக கூறினார். நவீன உபகரணங்கள், விரைவான தகவல்களை வழங்குதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார். கைபேசிகளுக்கு நேரடியாக ஒளிபரப்பு சேவை வழங்கும் தொழில்நுட்பத்திற்காக கான்பூர் ஐ ஐ டி-யுடன், பிரசார் பாரதி புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டிருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார். இதன்மூலம், சிம் கார்டு இல்லாமலேயே காணொலி மற்றும் தகவல்களை வாடிக்கையாளர்களின் செல்போன்களுக்கு வழங்க முடியும் என்றும் திரு எல். முருகன் குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>

வடகிழக்கு மாநிலங்களின் மேம்பாட்டிற்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளதாக உள்துறை இணையமைச்சர் திரு நித்யானந்த ராய் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர் வடகிழக்கு மாநிலங்களின் கல்வி, சுகாதார வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளதாக கூறினார். சாலை, ரயில் மற்றும் விமான போக்குவரத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். நாட்டின் முதலாவது விளையாட்டுப்பள்ளி மணிப்பூரில் ஏற்படுத்தப்பட்டுள்ளதையும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

<<<<<<>>>>

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், பட்ஜெட்டுக்கு முந்தைய ஆலோசனையை இன்று புதுதில்லியில் தொடங்கினார். பொருளாதார நிபுணர்கள் இந்த கூட்டத்தில் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>

வேளாண் விளைப்பொருட்களுக்கு உற்பத்திச்செலவில் 50 சதவீதத்திற்கும் கூடுதலாக குறைந்தபட்ச ஆதரவு விலையை வழங்குவதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக வேளாண்துறை அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார். இன்று மாநிலங்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், சில பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை உற்பத்தி செலவைவிட 100 சதவீதம் அதிகமாக நிர்ணயிக்கப்படுவதாக தெரிவித்தார்.

இதுதொடர்பாக, சாமிநாதன் குழு அளித்த பரிந்துரையை பிஜேபி தலைமையிலான மத்திய அரசுதான் நிறைவேற்றியுள்ளதாகவும் அவர் கூறினார். காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு, விவசாயிகளின் கோரிக்கையை நிறைவேற்றவில்லை என்றும் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்தார்.

<<<<<<>>>>

ஃபெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட தமிழகத்திற்கு தொள்ளாயிரத்து 44 கோடியே 80 லட்சம் ரூபாயை மத்திய அரசு விடுவித்துள்ளது. இயற்கை பேரிடரால் பாதிக்கப்பட்டுள்ள தமிழகத்திற்கு உதவிடும் வகையில் மாநில பேரிடர் மீட்பு நிதியத்திற்கான மத்திய அரசின் பங்காக இந்த நிதி விடுவிக்கப்படுவதாக உள்துறை அமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

மத்தியக்குழு ஆய்வுக்குப்பின்னர் பெறப்படும் பரிந்துரையின் அடிப்படையில் கூடுதல் நிதி, தேசிய பேரிடர் நிதியத்திலிருந்து விடுவிக்கப்படும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>

காற்று மாசு பிரச்சினை, மூச்சு திணறல் மற்றும் அதுதொடர்பான நோய்களுக்கு முக்கிய காரணியாக உள்ளது என்று மத்திய சுகாதாரத்துறை இணையமைச்சர் திரு பிரதாப்ராவ் ஜாதவ் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், காற்று மாசு காரணமாக உயிரிழப்பு மற்றும் எவ்வளவு பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்ற தகவல் இல்லை என தெரிவித்தார். காற்று மாசு மட்டுமல்லாது உணவு பழக்க வழக்க முறை, சமூக பொருளாதார நிலை மற்றும் நோய்கள் தொடர்பான மருத்துவ அறிக்கை போன்றவையும்நோய்களுக்கான காரணியாக இருப்பது கவலை அளிக்கக் கூடியது என்று திரு பிரதாப்ராவ் ஜாதவ் தெரிவித்தார்.

<<<<<<>>>>

விவசாயிகளுக்கு குறைந்த விலையில், பாஸ்பேட் மற்றும் பொட்டாசியம் உரம் கிடைப்பதை உறுதி செய்வதற்கான வழிமுறைகளை அரசு வெளியிட்டிருப்பதாக மத்திய ரசாயனம் மற்றும் உரத்துறை இணையமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேல் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் வேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், **D A P ’** உரம் மூட்டை ஒன்றுக்கு 3 ஆயிரத்து 100 ரூபாய்க்கு பதிலாக ஆயிரத்து 350 ரூபாய் விலையில் கிடைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும், சென்ற நிதியாண்டில் 65 ஆயிரம் கோடி ரூபாய் மானியம் வழங்கப்பட்டிருப்பதாகவும் கூறினார். நடப்பு ரபி பருவத்தில் 35 லட்சம் டன் **D A P** உரம் தேவைப்படும் நிலையில், 37 லட்சம் டன் உரம் கையிருப்பில் வைக்கப்பட்டிருப்பதாக திருமதி அனுப்பிரியா பட்டேல் கூறினார்.

<<<<<<>>>>

உத்தரப்பிரதேச மாநிலம் ஆக்ரா – லக்னோ விரைவுச்சாலையில் இன்று நேரிட்ட சாலை விபத்தில் எட்டு பேர் உயிரிழந்தனர். 18 பேர் காயமடைந்தனர். லக்னோவிலிருந்து தில்லி நோக்கி சென்ற இரண்டடுக்கு பேருந்து, சாலையோரம் நிறுத்தப்பட்டிருந்த லாரி மீது மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர். காயமடைந்தவர்கள் **Saifai** மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

<<<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

குவஹாத்தி மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Dhruv Kapila – Tanisha Crasto** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற கலப்பு இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 21-16, 21-14 என்ற செட் கணக்கில், இந்தியாவின் சாத்விக் - வைஷ்ணவி இணையை வென்றது.

மகளிர் ஒற்றையர் பிரிவில் **Anmol Kharb –**வும் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

-------------------

19 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

ஷார்ஜாவில் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில், இந்தியா ஏழு விக்கெட் வித்தியாசத்தில் இலங்கையை வென்றது.

இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த இலங்கை தொடக்கம் முதலே விக்கெட்டுகளை இழக்கத்தொடங்கி 46 புள்ளி இரண்டு ஓவரில் 173 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

அதிகபட்சமாக **Lakvin Abeysinghe** 69 ரன் எடுத்தார்.

சேத்தன் சர்மா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

174 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பின்னர் பேட் செய்த இந்தியா 3 விக்கெட் இழப்பிற்கு 175 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

நாளை மறுநாள் நடைபெறவுள்ள இறுதியாட்டத்தில் இந்தியா – பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

------------------

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் நாளான இன்று ஆட்டநேர இறுதியில் ஆஸ்திரேலியா முதல் இன்னிங்சில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 86 ரன் எடுத்துள்ளது.

அடிலெய்டில் நடைபெற்று வரும் இப்போட்டியில், **Nathan Mcsweeney** 38 ரன்னுடனும், **Marnus Labuschagne** 20 ரன்னுடனும் களத்தில் உள்ளனர்.

முன்னதாக, டாஸ் வென்று முதலில் பேட் செய்த இந்தியா முதல் இன்னிங்சில் 180 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

அதிகபட்சமாக நிதிஷ்குமார் ரெட்டி 42 ரன் எடுத்தார்.

**Mitchell Starc** அபாரமாக பந்துவீசி 6 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

------------------

செவித்திறன் குறைபாடு கொண்டவர்களுக்கான ஆசிய பசிபிக் விளையாட்டுப்போட்டிகளில் இந்தியா 2 தங்கம், மூன்று வெண்கலப்பதக்கங்களை வென்றது.

மலேசியாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின், ஜூடோ பிரிவில் இந்தியா இப்பதக்கங்களை வென்றது.

மகளிர் 48 கிலோ எடைப்பிரிவில் **Milanmeet Kaur**-ம், 57 கிலோ எடைப்பிரிவில் சாக்ஷியும் தங்கப்பதக்கம் வென்றனர்.

மகளிர் 52 கிலோ எடைப்பிரிவில் **Nirchara** –வும், ஆடவர் 66 கிலோ எடைப்பிரிவில் **Rakesh Singh** –கும், 73 கிலோ எடைப்பிரிவில் **Sambit Das**-ம் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

---------------

ஆசிய வாள்வீச்சு சம்மேளனத்தின் தலைமைச் செயலராக இந்தியாவின் திரு ராஜீவ் மேத்தா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

<<<<<<END>>>>